முரசொலி

ஆசிரியர்: மு. கருணாநிதி

முரசு: 5 | 17–4–59 | வெள்ளி | ஒலி: 47

கார்ப்பரேஷன் தேர்தல் முடிந்தது!



மனிதனின் கதை

பி. சி. கணேசன்

33. மதப் போர்!

அன்புள்ள மாதவி,

சொல்லுவது யார்க்கும் எளிது; சொல்லிய வண்ணம் வாழ்பவர்கள் மிகச் சிலரே!

குன்றளவு கொள்கை கூறிடுவோரும் கடுகளவும் அதைக் கடைப் பிடிக்காத நிலையை அன்றாட வாழ்க்கையில் நாம் சாதாரணமாகப் பார்க்கிறோம். உபதேசவழி நிற்பவர்கள் மகான்கள் என்று போற்றப்படுகிறார்கள்; மகாத்மா என்று மரியாதை பெறுகிறார்கள். வாளின் வலிமையால் வரலாற்றில் இடம் பெற்றோரைவிட, கொள்கையை வாழ்ந்து காட்டியதால் வரலாற்றில் இடம்பெற்றோர் மேலானவர்கள். முன்னவர்கள் பாராட்டுக்குரியவர்கள்; பின்னவர்கள் வழிபாட்டுக்குரியவர்கள்.

இத்தாலி நாட்டிலே அஸிஸி (Assisi) என்றொரு ஊர். அங்கே பொருள் மிகுந்த வணிகன் ஒருவன் வாழ்ந்தான். அவனுக்கு ஒரு மைந்தன். சீமான் வீட்டுப் பிள்ளையின் வாழ்க்கையென்றால் கேட்கவா வேண்டும்? பலாவை மொய்க்கும் ஈப்போல அந்த இளைஞனைச் சுற்றி ஒரு கூட்டம். ஃபிரான்சிஸ் என்பது அந்த இளைஞனின் பெயர். ஃபிரான்சிசின் பெருமையைப் பாடுவதே அக்கூட்டத்தின் வேலை. ஃபிரான்சிசும் அவன் நண்பர்களும் செய்யாத செயலில்லை; ஈடுபடாத கேளிக்கையில்லை; சுவைக்காத இன்பமில்லை! சண்டையை விலைகொடுத்து வாங்குவதே அவர்கள் வேலை. ஒரு சமயம் அஸிஸி நகர மக்களுக்கும் அண்டை நகர மக்களுக்குமிடையே ஒரு சண்டை மூண்டது. பிரதான கதாநாயகன் ஃபிரான்சிஸ் என்று சொல்ல வேண்டியதில்லை. ஃபிரான்சிசின் கட்சி தோற்றது. அவன் கைதானான். ஓராண்டுக் காலம் சிறையில் தனிமையில் வாழ்வைக் கழித்தான். நோய் வேறு அவனைப் பீடித்தது. வாழ்க்கையில் இடர் எய்தவே, ஃபிரான்சிஸ் தனது கடந்த கால வாழ்க்கையில் கண்ணோட்டத்தைச் செலுத்தினான். தனது பழைய வாழ்க்கையின் பாபங்கள் அவனைச் சித்ரவதை செய்தன. நல்வாழ்வு வாழ முடிவு செய்தான். உடல் குணமானவுடன், வாழ்வின் இன்பங்கள் மீண்டும் அவனை ஆசைகாட்டி அழைத்தன. சிற்றின்பங்களில் திளைத்தான். சிங்காரிகளின் அரவணைப்பிலே தனது தீர்மானங்களை மறந்தான். நோய் முற்றியது; பாப மூட்டையின் கனத்தை உணர்ந்தான். மீண்டும் நல்வாழ்வில் ஈடுபட பிரதிக்ஞை எடுத்துக் கொண்டான். இம்முறை அவன் உறுதி குலையவேவில்லை. தூய வாழ்க்கை வாழ்ந்தான். பிறகு, புனித ஃபிரான்சிஸ் (Francis, The Saint) என்ற பட்டத்தையும் பெற்றான்.

வாழ்க்கையில் ஏதாவதொரு தூய புருஷரை ஆதர்சமாகக் கொண்டு வாழ வேண்டுமென்று ஃபிரான்சிஸ் முடிவு செய்தான். உலகம் உய்யவும், பாபிகள் ரட்சிக்கப்படவும் சிலுவையிலே மரித்த ஏசு அவன் சிந்தனையில் நிறைந்தார். ஏசுநாதர் வகுத்த வழியில், இம்மியும் பிசகாமல், இடர் எதுவரினும் வாழ்ந்து காட்டுவது என ஃபிரான்சிஸ் முடிவு செய்தான் அப்பொழுது அவனுக்கு வயது இருபத்திரண்டுதான்.

'உள்ளதை விற்று ஏழைகளிடத்தில் பகிர்ந்துகொள்' என்ற ஏசுநாதரின் வாசகம் ஃபிரான்சிசின் இதயத்தில் பசுமரத்தாணி போல் பதிந்தது. ஃபிரான்சிஸ் ஆடம்பரத்தைத் துறந்தான்: அழகிகளை மறந்தான். வறியவர்களின் துயர் துடைக்க வாழ்க்கையை அர்ப்பணித்தான். பிச்சைக்காரரோடு பிச்சைக்காரன் ஆனான். அழகிகளின் அங்கங்களை வருடிய அவன் கரங்கள், குஷ்டரோகிகளின் புண்களைக் கழுவி மருந்திட்டன. பழரசங்களையும் பாவையரின் அதரங்களையும் சுவைத்த அவன் உதடுகள், சேரிகளில் ஒதுக்கப்பட்டவர்களாய் வாழ்ந்த குழந்தைகளின் முகங்களில் அன்பு முத்தம் ஈந்தன. ஃபிரான்சிஸ் ஏழைப் பங்காளன் ஆனான்! சொத்துக்களை இப்படி மகன் விரயம் செய்வதைப் பார்த்த ஃபிரான்சிசின் தந்தை, அஸிஸி நகரில் இருந்த மத குருவான — பிஷப்பின்—உதவியால் தன் சொத்தில் ஃபிரான்சிசுக்கு இருந்த உரிமையை ரத்து செய்தார்!

ஏசுநாதரின் கொள்கையை வாழ்ந்து காட்டிய ஃபிரான்சிஸ் சொத்து இழந்தான்!

ஏசுநாதரின் கொள்கையை உபதேசிப்பதை மட்டுமே தொழிலாகக் கொண்டிருந்த பிஷப்—பாதிரி—ஃபிரான்சிசின் சொத்துரிமையைப் பறிக்கும் அதிகாரத்தைப் பெற்றிருந்தான்!

இந்த நிகழ்ச்சி ஃபிரான்சிசின் சங்கல்பத்தை நிலைகுலையச் செய்துவிடவில்லை. மாறாக, அக்கொள்கையில் உறுதி கொள்ளவே செய்தது. போப்பாண்டவரின் அனுமதியோடு, ஃபிரான்சிசும் அவர் வழியை நம்பிய அவர் தம் சீடர்களும் தனியாக ஒரு மடத்தை ஸ்தாபித்துக் கொண்டு, தங்கள் கொள்கையைப் பரப்பினர். நாளடைவில் இந்த மடத்தில் உறுப்பினர்கள் பெருகி, சொத்தும் சேரவே ஊழல்கள் பிறந்தன. ஃபிரான்சிஸ், மடத்தில் இருந்தால் தன் அடிப்படைக் கொள்கைகள்கூட அழிந்து போகும் எனப் பயந்து கடைசி காலத்தில் மடத்தை விட்டு வெளியேறி மீண்டும் எளிய வாழ்க்கை மேற்கொண்டார்.

ஃபிரான்சிஸ் மனிதர்களிடத்து மட்டுமல்ல — எவ்வுயிரிடத்தும் இன்னருள் சுரக்க வேண்டுமென்ற கொள்கை உடையவர். காக்கை, குருவி எங்கள் சாதி— நீள் கடலும் மலையும் எங்கள் கூட்டம் என்ற உயர்ந்த பொது நோக்கு, அவர்நோக்கு!

ஃபிரான்சிஸ் வாழ்ந்த காலம் மதப் போர்கள் நடந்துகொண்டிருந்த காலம்! அவர் கி. பி. 1182-ல் பிறந்தார். அக்காலத்தில் ஏசுநாதரின் பிறப்பிடமான ஜெருசலேம் (Jerusalem) முஸ்லிம்கள் வசம் இருந்தது. அராபிய முஸ்லிம்கள் அங்கே ஆதிக்கம் பெற்றிருந்தவரை, கிறிஸ்தவ யாத்ரீகர்கள் அங்கே சென்றுவர தாராளமாக அனுமதியளித்திருந்தனர். ஆனால் துருக்கிய முஸ்லிம்கள் அங்கே ஆதிக்கம் பெற்றபொழுது இந்தச் சலுகை ரத்து செய்யப்பட்டது. இது கிறித்தவ உலகத்தின்—ஐரோப்பியர்களின்—சீற்றத்தைத் தூண்டியது. மதத்தின் அடிப்படையில் ஐக்யத்தை ஏற்படுத்த எண்ணிய போப்பாண்டவருக்கு இது நல்லதொரு வாய்ப்பாயிற்று. கிறித்துவ மன்னர்கள் அனைவரும் தங்கள் புனித பூமியை மீட்கும் மதப் போரில் ஈடுபட வேண்டுமென்று ஆணையிட்டார். வீரத்தைக் களத்திலே காட்ட வாய்ப்பைத் தேடி நின்ற மன்னர்கள் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டனர். முடிவில் அவர்கள் பொதுவான லட்சியத்தை மறந்தனர். யார் தீரமிக்கவர் என்ற பலப் பரீட்சை அவர்களைப் பலஹீனப் படுத்தியது.

இந்த மதப்போர் — கிறிஸ்தவ மதமும் இஸ்லாம் மதமும் மேற்கொண்ட போர்-சுமார் இரண்டு நூற்றாண்டுகள் நடந்தது. கிறித்தவர்கள் வென்ற ஜெரூசலத்தை சலாடின் (Saladin) என்ற முஸ்லிம் மன்னன் கி. பி. 1187—ல் மீண்டும் கைப்பற்றிக் கொண்டான்.

இப் போர்களினால் துருக்கிய முஸ்லிம்களின் ஏகாதிபத்யம் பரவுவது தடுக்கப்பட்டது. ஐரோப்பாவோடு மத்திய கிழக்கு நாடுகள் கொண்டிருந்த வியாபார வழிகள் மீண்டும் திறந்துவிடப்பட்டன. வியாபாரப் போக்குவரத்தால், கிழக்கும் மேற்கும் மீண்டும் கலாச்சாரத் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள வாய்ப்பு உண்டாயிற்று. போருக்குச் சென்ற மன்னர்கள் தாயகம் திரும்பியபோது, தங்களோடு பிறநாடுகளில் பெற்ற புதிய எண்ணங்களையும் கொண்டு வந்தனர். வெளிநாடு சென்று திரும்பிய நிலப்பிரபுக்கள் செல்வமிழந்ததால், மன்னர்கள் வலிமை பெறவும் அவர்கள் தலைமையில் நாடுகள் (Nations) உருவாகவும் வழிபிறந்தது. மதம், அரசியல் செல்வாக்குப் பெற்றது; ஆத்மீக செல்வாக்கை இழந்தது.

மதவுரிமைகளுக்காக மக்களின் இரத்தம் ஆறாக ஓடிய காலத்தில் தான், ஃபிரான்சிஸ் போன்ற நல்லவர்கள் கோட்பாடுகளை வாழ்ந்து காட்டினார்கள். போப்பாண்டவர் புனிதப் போர் நடத்திப் பிண மலையைக் குவித்த போது, ஏசு நெறியை வாழ்ந்து காட்டிய ஃபிரான்சிஸ் அவரையறியாமலே சீர்திருத்தப் புரட்சிக்கு வித்திட்டார் என்பதையும் நீ கவனிக்க வேண்டும்.

அன்புள்ள,

அகத்தியன்.

ஊருக்கடி உபதேசம்; உனக்கல்லடி!

ஒற்றுமை சீர்குலைவு எண்ணத்தை திராவிட முன்னேற்றக் கழகம் கைவிட வேண்டும். சாதி ஒழிப்பு போன்ற பொதுப் பிரச்னைகளிலே கைகோர்த்து செயல்பட வேண்டும்!

— என்று திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அறைகூவல் விடுத்தாராம், லோகியாவின் சோஷலிஸ்ட் கட்சித் தலைவரான மதுலிமாயி, மதுரை சோஷலிஸ்ட் மாநாட்டில்!

ஏதோ இவர், நமக்கில்லாத ஒற்றுமை எண்ணத்தைப் பரப்ப வந்தவர் போலவும், பொதுப் பிரச்னைகளில் கை கோர்த்துப் பணியாற்றும் பண்பைக் கற்றுக் கொடுக்க வந்த வடநாட்டு வாத்தியுராகவும் நினைத்துப் பேசியிருக்கிறார்.

அந்தோ பரிதாபம், இவர் பேசி முடிவதற்குள்ளேயே இவருடைய ஒற்றுமை மனோபாவத்தைத் 'தண்டோராப் போடும்' நிகழ்ச்சி ஒன்று நிகழ்ந்துவிட்டது!

திரு. மதுலிமாயி, அங்கம் வகிக்கும் சோஷலிஸ்ட் கட்சியிலிருந்து விலக்கப்பட்ட சென்னை அந்தோணிப் பிள்ளை மதுரை மாநாட்டில் தோன்றினாராம். விரட்டப்பட்ட அந்தோணிப்பிள்ளை மாநாட்டில் தோன்றவே வடநாட்டுத் தலைவர் மதுலிமாயி மாநாட்டுப் பந்தலை விட்டு வெளியேறினாராம்!

அதே இடத்தில் அந்தோணியார் மற்றொரு மாநாடு நடத்தினாராம், மத்தியக் கமிட்டியின் செயல்களைக் கண்டித்து! இந்த வியப்புக்குரிய ஒற்றுமையை. நேசபாவத்தை தன் கட்சிக்குள்ளேயே வைத்துக்கொண்டு இன்னொருவரைப் பார்த்து ஒற்றுமைச் சீர்குலைவு செய்யாதேயென்று கூவுவது, தன் முகத்தில் உள்ள கறையைத் துடைக்காது, மாற்றான் முகத்தில் மாசு ஏதாவதிருக்கிறதா எனத் தேடும் இழிகுணத்தவரின் செயலைப் போன்றதுதான்.

வெள்ளி 17—4—59 சென்னை

ஆட்சிக் கப்பல்

காந்தியார் வழி நடப்போம்; எந்தக் காரியத்திலும் அந்தக் கருணாமூர்த்தியார் காட்டிய வழியைத்தான் பின்பற்றுவோம்!—என்று எதிர்ப்புகள் படையெடுக்கும் நேரத்தில் தொடை தட்டிக் கொண்டு காந்திய ஆயுதத்தைக் கரத்திலேந்திக் களம் புகுவார்கள், நம் காங்கிரஸ் தோழர்கள்!

அந்தக் குறிப்பிட்ட போர்க்களம் முற்றுப் பெற்றவுடன் அந்தக் காந்தியக் கருவியைக் கிழக்கே இருக்கும் வங்காளக் குடாக்கடலிலே வீசி எறிந்துவிட்டு வழக்கமான திருவிளையாடல்களை நடத்துவார்கள்.

சட்டையில்லாத சென்னைவாசிகளைக் கண்டதும் மட்டில்லா துன்பம் கொண்டு, வரி வரியாகத் தலையிலே சுற்றியிருக்கும் 'மார்வாடி'த் தலைப்பாகையையும், கால்வரை நீண்டு தொங்கும் உடையையும் கழற்றி எறிந்துவிட்டுத் தன்னுடைய போது நலப் பற்றையும், சிக்கனத்தையும் காட்டிக்கொண்டார் காந்தியார்!

பத்து கெஜ நீளத் துணி தலைப்பாகைக்கு அவசியமற்றது என்று நினைத்த அவர் சிக்கன ஆராய்ச்சி செய்து கண்டு பிடித்தது தான் காந்திக் குல்லாய்!

ஆப்பிள் பழமும், ஆரஞ்சு ரசமும் வேண்டாம்; வேர்க்கடலையும் வெள்ளாட்டுப் பாலும் போதும் என்ற அவருடைய கண்டுபிடிப்பு சிக்கன ஆராய்ச்சியின் எவரெஸ்ட் சிகரம்!

லட்சோப லட்சம் ரூபாய்களை அரிசன நிதிக்காகவும் கஸ்தூரிபாய் நிதிக்காகவும் சேகரித்த அவர், அனாதை விடுதியினர் நன்கொடை கேட்டபோது தந்த தொகை, காலணா!

நிதித் தொகையில் வீண் விரயம் ஏற்படாமல் தடுக்க விடிய விடிய கணக்குத் தணிக்கை பார்க்கும் கண்டிப்பான உள்ளம் படைத்தவர், காந்தி!

அத்தகையவரின் வாரிசுகள்—அவர் உண்டாக்கித் தந்த புனித ஸ்தாபனத்தின் 'உற்சவ தேவதை'கள் ஆட்சிபுரியும் இந்த பாரத தேசத்திலேதான் சிக்கனம் என்றால் 'என்ன விலை' என்று கேட்கும் இழிநிலை வந்திருக்கிறது.

காந்தி அடிகளின் வழிவந்த இந்தக் காங்கிரஸ் மகா சபையால்தான் ஆளமுடியும்; வேறு எந்தக் கட்சியும் ஆள்வதற்கு லாயக்கற்றது என்று சித்தாப்புக் கொட்டுகின்ற இவர்கள் ஆட்சியில் தான் மன்னிக்கமுடியாத தவறுகள் கோடைக்கால மின்னல்களைப் போல் அடிக்கடி தோன்றி மறைகின்றன!

அத்தகைய ஊழல்களும் தவறுகளும் இந்த மாதத்திய செய்திகளில் மட்டுமே ஏராளமாகத் தென்படுகின்றன!

அவற்றில் முதன்மை வாய்ந்தது, துணைக்கண்ட முதலமைச்சர் நேரு அவர்களாலேயே எடுத்துக் கூறப்பட்ட ஒரு இமாலயத் தவறாகும்!

"உணவுப் பொருட்கள் கொண்டுவரும் அந்நிய நாட்டுக் கப்பல்களுக்கு நாம் செலுத்திய கட்டணம், நம்மை திக்பிரமையடையச் செய்வதாய் இருக்கிறது. அவற்றில் ஒரு சிறு பகுதியை மீதம் பிடித்திருந்தால் கப்பல்களை விலைக்கே வாங்கியிருக்க முடியும்; அல்லது கட்டியிருக்க முடியும்!"

— என்று அவர் வருத்தம் பொங்கி வழியக் கூறினாராம்!

பொதுப் பணத்தில் ஒவ்வொரு சல்லிக் காசையும் மதித்துச் செலவிட வேண்டும்; அப்போதுதான் ஏழையர் உலகத்தின் கண்ணீரை—உழைப்பை ஆட்சி பீடத்திலே இருப்பவர்கள் மதித்தவர்களாக ஆவார்கள்! ஜனநாயக அரசு கடைப்பிடிக்க வேண்டிய இந்த அரிச்சுவடியைக்கூட தன் தலைமையின்கீழ் இயங்கிவருகின்ற பாரத அரசு உணர்ந்து கொள்ளவில்லையே என்ற வேதனை அவரது குரலிலே நெளிந்தோடுகிறது!

கஜானாவின் திறவுகோலைக் கையிலே வைத்திருப்பவர்கள், அதைத் திறக்கும் ஒவ்வொரு கணத்திலும் கோடிக் கணக்கான ரூபாய்கள் தம்முன்னால் கொட்டிக் கிடக்கின்றன; அதை இச்சைப் போல் வாரியிறைக்கும் வலுவைப் பெற்றிருக்கிறோம் என்று மட்டும் தான் உணர்கிறார்கள். அதே நேரத்தில் தம்முன்னால் நீதியும் நேர்மையும் நேத்திரங்கள் திறந்து கவனித்துக் கொண்டே இருக்கின்றன என்பதை ஏனோ மறந்து விடுகிறார்கள். அதிகாரத் திமிரினால் அவர் தம் விழிகள் மூடிக் கொள்கிற நேரத்தில், பழிக்கஞ்சா கோரே இதயம் தன் பாதையில் கட்டவிழ்ந்து ஓடத் தொடங்கிவிடுகிறது. அதன் விளைவாக ஏழைகளின் வரிப்பணம் விழலுக்கிறைத்த நீராகி விடுகிறது!

இப்படி எண்ணற்ற கோடிகளை, கண்ணற்ற குருடர் நிலையிலே காட்டுக் கிறைத்த நிலவாக்கிய சம்பவங்கள் இந்திய அரசின் பனிரெண்டு ஆண்டுகால வரலாற்று ஏட்டிலே கணக்கற்றுக் காணப்படுகின்றன!

கப்பல்களுக்கென்று கட்டணம் செலுத்தினார்கள் இலட்சம் இலட்சமாக. அந்நிய நாட்டு முதலாளிகள் இந்த நாட்டு சர்க்காரின் அறியாமைப் பண்பை—ஆராயாத தன்மையைப் பயன்படுத்திக் கொண்டு லாபத்தைக் குவித்தார்கள். அந்தப் பெருந் தொகையின் ஒரே ஒரு பகுதியைக் கொண்டு சொந்தமாகவே கப்பல்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற சாதாரணமான உண்மையைக் கண்டு பிடிக்க இங்கிருக்கிற நிர்வாகத்திலே ஆள் இல்லை; எடுத்துச் சொல்லும் திறமைபடைத்த நபர் இல்லை! செலவழித்த பின்னால் செய்திருக்கலாமே அப்படி என்று ஒப்பாரி வைக்கவும் ஒரே ஒரு பண்டிதர் தான் கிடைத்திருக்கிறார், இந்தப் பாரதத் தாய் பெற்றெடுத்த நாற்பது கோடி புதல்வர்களில்!

அவரது குரல் வேதனையை மட்டுமல்ல; விளையாட்டுத்தனமான நிர்வாகத்தை—விவேகமில்லாத ஆட்சியைத்தான் காட்டுகிறது.

மக்களின் வரிப் பணத்தை, மாற்றான் வீட்டுக் கிணற்றுத் தண்ணீராக நினைத்து வாரி யிறைக்கும் இந்த பொறுப்பற்ற தன்மை எல்லாத் துறைகளிலேயும்—எல்லா நேரங்களிலேயும் நடைபெற்றுக் கொண்டே வருகின்றன!

காங்கிரஸ் ஆட்சி கோலேச்சும் பம்பாய் மாநிலத்தில் 10 ஆயிரம் டன் தானியம் கொள்முதல் செய்ய **மத்திய பாரத் கம்பனி** என்ற பெயருடைய கம்பெனி ஒன்றுக்கு காண்டிராக்ட் கொடுக்கப் பட்டது.

அந்தக் கான்ட்ராக்ட்டின் மதிப்பு 29 லட்ச ரூபாய்! ஆனால் இச் செய்தியிலிருக்கும் வேடிக்கை என்ன வென்றால் மத்ய பாரத் கம்பெனி என்ற பெயருடைய ஒரு நிருவணமே எங்கும் இல்லையாம்!

இதோடு நின்றுவிடவில்லை, வேதனை கலந்த இந்த வேடிக்கை!
இந்தக் கம்பெனிக்கு கான்ட்ராக்ட் கொடுக்கச் சொன்னது
மத்திய அரசுதானாம்!

இல்லாத கம்பெனிக்கு 29 இலட்ச ரூபாய் காண்ட்ராக்ட் தரும் இந்த ஊதாரி அரசின் செயல்களை அடுக்கிக் கூறுகிறது, தணிக்கைக் கமிட்டி ஒன்று!

திறமைமிகுந்த இந்த அசகாய சூரர்களே சில பொருள்களை வாங்கி விற்றதில் வேறு அடைந்த நஷ்டம் 71 லட்சமாம்!

இந்த 71 லட்சத்திலும் கையாடல் மோசடி, மார்க்கெட் நிலவரம் தெரியாது நடத்திய பேரங்கள்—ஆகியவற்றால் ஏற்பட்ட நஷ்ட இனங்களும் உண்டாம்!

ஒரு வாகின் உணவு தான்யம் திடீரென்று ஒரு நாள் காணாமல் போய் விட்டதாம்!

—இத்தனை ஓட்டைகளையும் தங்கள் படகிலே வைத்துக் கொண்டு, சுகமான கடல் பயணத்திற்கு எங்களை நாடுங்கள் என்று விளம்பர வெளிச்சம் போடுகிறார்கள் நம் காங்கிரஸ்காரர்கள்!

கப்பல் போக்குவரத்திலே கண்மூடிக் கிடந்த கேவலமான செயலை மட்டும் இந்தத் துணைக்கண்டத்தின் முதல்வர் எடுத்துக் காட்டவில்லை; இந்த விழியற்ற நிர்வாகத்தினால், வாழும் வகையற்ற இந்நாட்டு மக்களின் வரிப்பணம் உப்பு நீருக்கு உணவாக மூழ்குவது போலவே, இவர்களது ஆட்சிக் கப்பலுங்கூட ஊழல் என்ற கடலிலே நாளுக்குச் சிறிதாக மூழ்கித்தான் வருகிறது என்பதையும் எடுத்துக் காட்டிவிட்டது!

இந்த ஓட்டைப் படகுக்காரர்களை நம்பி, நம் நாட்டை ஒப்படைத்திருக்கிறோம். இவர்கள் இந்த நாட்டை ஒழுங்காக முறையாக ஆள்வார்களா—அல்லது ஆழக் குழிதோண்டிப் புதைத்து விடுவார்களா—யார் கண்டது?

ஃ

அவர்கள் சிலர்; நாம் பலர்!

★

தலைநகரில் அண்ணா முழக்கம்!

[15—4—59—அன்று சென்னை கடற்கரையில் நடைபெற்ற வெற்றிவிழாப் பொதுக் கூட்டத்தில் அறிஞர் அண்ணா ஆற்றிய உரையின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது.]

அடித்தனர் அரசினர்; அணைத்தனர் மக்கள்!

நடைபெற்ற கார்ப்பரேஷன் தேர்தலில் நம்முடைய கழகத் தோழர்கள் 45 பேர் நல்ல வெற்றியை பெற்றதற்காக, அவர்களைப் பாராட்டுவதற்காக நடத்தப்படுகிற மாபெரும் கூட்டத்தில் நாம் உற்சாகத்தோடு கலந்து கொள்கின்ற இதே நேரத்தில் — இதே இடத்தில்-சென்ற ஆண்டு நாம் கூடிய கூட்டத்தின் நினைவு எனக்கு நிச்சயமாக வருகிறது. அப்போது நாம் காங்கிரஸ் ஆட்சியினர் நமக்குக் கொடுத்த அடிகளின் தழும்புகளைத் தடவிக் கொண்டு கூடினோம். அந்தத் தழும்புகளை எண்ணிப் பார்த்துக் கொண்டிருந்த நாம்—இப்போது வெற்றிபெற்ற நம்முடைய கழகத் தோழர்களின் எண்ணிக்கையை எண்ணிப் பார்த்துக்கொண்டு கூடியிருக்கிறோம். தியாகத் தழும்புகள் எத்தகைய பலனைத் தருகின்றன என்பதை அரசியல் வட்டாரத்திலே உள்ளவர்கள் உணர்ந்துகொள்வதற்கு இக் கூட்டம் நல்லதொரு பாடமாக அமைந்திருக்கிறது!

அன்றைய தினம் அடிபட்ட தோழர்களைப் பார்த்து கண்ணீர் உகுத்த நாம், இன்றைய தினம் அடித்த காங்கிரஸ் காரர்களைப் பார்த்து கேலிச் சிரிப்பு சிரிக்கமாட்டோம்! அத்தகைய கேவலப் புத்தி நமக்கு இல்லை! 'அடித்தீர்கள் எங்களை சென்ற ஆண்டு; பொது மக்கள் அணைத்தார்கள் எங்களை இந்த ஆண்டு! இந்த அரசியல் பாடத்தை இனி அறிந்து கொள்ளுங்கள்' என்று மட்டும்தான் அவர்களுக்கு நாம் இன்றைய தினம் கூறக் கடமைப்பட்டிருக்கிறோம்.

கழகத் தோழர்களிலே பலபேர் அதிகமான அளவுக்குப் பூரிப்பு அடைந்திருக்கிறார்கள். அதைப் பார்த்துத்தான் நான் பயப்படுகிறேன். மேலும் இதில் அதிகமாக மகிழ்ச்சியடையாமல் இருப்பவன் நான் ஒருவன்தான் என்பதை என்னுடைய பேச்சாலல்ல; என்னுடைய தோற்றத்தால் நீங்கள் அறிந்துகொள்ள்முடியும். ஏனெனில், நாம் செல்ல வேண்டிய தூரத்தை எண்ணிப் பார்க்கிறேன்; நாம் அடைய வேண்டிய வெற்றிகளைப்பற்றி எண்ணிப்பார்க்கிறேன்; நாம் நடந்து செல்ல வேண்டிய பாதையில் எதிர்காலத்திலே இருக்கக் கூடிய கள்ளியையும் காளானையும் — முள்ளையும் கல்லையும் எண்ணிப் பார்க்கிறேன்; அப்படிப்பட்ட பயணத்திற்குத் தயாராகிக் கொண்டிருக்கிற நாம் இந்தச் சாதாரண வெற்றிகளைக் கண்டு மலைத்துவிடக்கூடாது என்கிற எண்ணம் என்னுடைய உள்ளத்தில் மூளைத்தெழுகிறது!

வெற்றி பெற்ற நம்முடைய தோழர்களிலே யாரும் மொத்தத்திலே ஓர் ஆயிரம் ரூபாய்கூட செலவழிக்கக்கூடிய செல்வவான்கள் அல்ல. நான் அவர்களுடைய வறுமையை எண்ணிப் பார்த்தேன்; அவர்கள் இருக்கிற நடுத்தரக் குடும்பத்தை நினைத்துப் பார்த்தேன்; அவர்கள் அன்றாடம் தங்களுடைய வாழ்க்கைக்காக இடையறாது உழைத்துப் பிழைக்க வேண்டியவர்களாயிற்றே என்றும் எண்ணினேன்; அவர்கள் அனைவரும் பணத்தால் — பதவியால் — அரசியல் சூழ்ச்சிகளால் தாக்கப்பட்டால் எப்படி வெற்றிபெற முடியும் என்று சந்தேகப்பட்டேன். ஆனால் இன்றையதினம் நானும்கூட ஒரு நல்ல அரசியல்பாடம் கற்றேன். ஏழ்மைக்கும் எளிமைக்கும், உண்மைக்கும், உழைப்புக்கும், தூய தொண்டிற்கும் நாட்டு மக்கள் மதிப்பளிக்கிறார்கள் என்பதை உணர்ந்து கொண்டேன்!

பதவி மறப்பீர், பிரபுக்களே!

இதனை மறுக்கின்ற முறையிலே நம் முதலமைச்சர் காமராசர் "மத்தியதர வகுப்பினர் ஓட்டுப் போடவில்லை. அதனால்தான் முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றது" என்று சொல்லியிருக்கிறார். மத்தியதர வகுப்பினர் ஓட்டுப் போடவில்லை என்று சொன்னால், ஒன்று செல்வவான்கள் நமக்கு ஓட்டுப் போட்டிருக்க வேண்டும்; அல்லது ஏழை எளியவர்கள் போட்டிருக்க வேண்டும். செல்வவான்களை எடுத்துக் கொண்டால், அவர்கள் எண்ணிக்கையிலே மிகக் குறைவு. ஆகையினால் ஏழை எளியவர்கள் எங்களுக்கு அதிகமான அளவிற்கு ஓட்டு போட்டதால்தான் நாங்கள் வெற்றி பெற்றிருக்கிறோம் என்று காமராசர் சொல்வதை நான் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன்.

நாங்கள் பஞ்சை, பராரிகள் கட்சிதான். முதலமைச்சர் அவர்களே! உங்கள் மொழியிலே சொல்ல வேண்டுமானால் நாங்கள் பிச்சைக்காரக் கூட்டம்தான்! பிச்சைக்காரக் கூட்டத்தை அதே பிச்சைக்காரக் கூட்டம் இன்றைய தினம் ஆதரித்திருக்கிறது. பிச்சைக்காரர் இவ்வளவு பெருத்துவிட்ட பிறகு மேன்மை தங்கிய பிரபுக்களே! உங்கள் இடங்களைக் காலி செய்யுங்கள்! பிச்சைக்காரர்கள் நாட்டிலே வளர்ந்து விட்டார்கள் என்றால் பிரபுக்கள் இருப்பது பிரபுக்களுக்கே ஆபத்து!

ஆங்கிலக் கவிவாணர் ஷெல்லி சொன்னார், "They are Few; We are many!" என்று! பணபலம் படைத்த அவர்கள் சிலர்! பணபலம் இல்லாத நாம் மிகப் பலர்! ஏராளமானவர்களாகிய நாம் ஏந்துவது பிச்சைப் பாத்திரங்கள்! விரல் விட்டு எண்ணக் கூடிய அவர்கள் மாளிகைவாசிகள்!

ஒரு ஆட்சியிலே மாளிகைகள் விரல்விட்டு எண்ணத்தக்க அளவுக்கும் அதைச் சூழக் குடிசைகளும் இருக்குமானால் மாளிகைவாசிகள் மருளத்தான் வேண்டும். பிரஞ்சு நாடு அந்தப் பாடத்தைத்தான் காட்டுகிறது. ரஷ்யா அந்த உண்மையைத்தான் போதிக்கிறது.

வெற்றி பெற்ற தோழர்களை நான் மனமாரப் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் எனக்கு இடப்புறத்திலே அமர்ந்திருக்கின்ற தோழர் கண்ணபிரானைப் போன்றவர்கள் வெற்றி பெற முடியாமற் போய்விட்டதையும் நினைக்கிறேன். அவர்கள் பெற்றிருக்கின்ற வெற்றி அரசியல் பாடத்தைக் காட்டுகிறது என்றால், வெற்றியை இழந்துவிட்ட இவர்களும் களிப்போடு இந்த வெற்றி விழாவிலே கலந்து கொள்ளத்தக்க அளவுக்கு நெஞ்சிலே பெருந்தன்மையைப் பெற்றிருக்கிறார்கள். இதுதான் கழகத்திற்கு இருக்கிற ஜீவசக்தி! ஒரு புறத்திலே இருப்பது கழகத்திற்கு கிடைத்திருக்கின்ற வெற்றி; மறுபுறத்திலே இருப்பது கழகத்திற்குக் கிடைக்க வேண்டிய வெற்றி! ஆகையால், கிடைத்த வெற்றியோடு கிடைக்கின்ற வெற்றியைக் கூட்டிப் பார்க்கின்ற நேரத்தில் என்னையும் அறியாமல் இரும்பூதெய்துகிறேன்.

கழகத்திலே வெற்றி பெற்றவர்கள் எப்பொழுதும் மக்களைச் சந்திப்பவர்கள். இன்றைய தினம் சந்தித்தார்கள்; நாளையும், மறு நாளும் சந்திப்பார்கள்!

இது ஏதோ கிண்டி குதிரைப் பந்தயத்திலே ஆறும் நம்பர் குதிரையின் பேரிலே சீட்டு எடுத்து, ஏழாம் நம்பர் குதிரைக்குக் கால் சிறிது முடமான காரணத்தால், ஆறும் நம்பர் குதிரை முன்னுக்கு வந்துவிட்ட 'புளுக்' அல்ல; அரசியல் வட்டாரத்தில் சிலர் இப்படிக் கருதுவார்கள். உண்மை அதுவல்ல; இங்கே வெற்றிபெற்றிருக்கின்ற தோழர்கள் ஒவ்வொருவரும் பத்தாண்டு காலம், இருபதாண்டு காலம் சுயமரியாதை இயக்கம் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதற்கொண்டு தூயத் தொண்டாற்றியவர்கள். அவர்களிலே பல பேர் சிறை சென்றவர்கள்; பல பேர் தடியடிக்கு ஆளாகி தியாகத் தழும்புகளைப் பெற்றவர்கள்; பலபேர்களுடைய வீடுகளிலே உள்ளவர்கள் பத்தாண்டு காலத்திற்கு முன்னாலே 'இந்தப் பிள்ளைகளுக்கெல்லாம் கிரகம் போதாது; ஆகையினால்தான் இப்படிக் கெட்டு அலைகிறார்கள்' என்று நிந்தித்திருப்பார்கள். ஆனால் இன்று வீட்டுக்கும், நாட்டுக்கும் பெருமையைத் தேடித் தரத்தக்க நல்ல நிலைமையை அவர்கள் பெற்றிருக்கிறார்கள்.

'சோதிடம்' சொன்னார்; மோதிரம் தருகிறேன்!

இந்த வெற்றிக்காக உழைத்த சென்னை மாவட்டக் கழகமும்— அதற்கென்று அமைத்துக் கொண்ட ஒரு தேர்தல் குழுவும் பாராட்டுக்குரியனவாகும். மாவட்டத்தினுடைய செயலாளராகப் பணியாற்றிக் கொண்டிருக்கும் தோழர் செங்குட்டுவனை நான் பார்ப்பதற்குக் கூச்சப்படுகிறேன். தேர்தலுக்கு ஆட்களை நிறுத்திய காலத்தில் அவர் என்னைப் பார்ப்பதற்குக் கூச்சப்பட்டார். ஏனென்றால், நான் மிரட்டிக்

புன்னகையோடு பொன்னகை பூட்டும் அண்ணா!

புகைப்படம்: அமிர்தம்

கொண்டேயிருந்தேன், "இத்தனை இடத்திலே நிற்க வைத்து விட்டிருக்கிறீர்களே; எப்படி வெற்றி பெறப் போகிறீர்கள்?" என்று. ஆனால் அந்த நேரத்தில் வெட்கப்பட்டுக் கொண்டிருந்த தோழர் செங்குட்டுவனை, நான் இன்றைய தினம் வெட்கத்தோடு பார்க்கவேண்டியிருக்கிறது. இவ்வளவு சாதாரண—எளிய — இளமைப் பருவமுள்ள இவ்வுருவம் இந்த அளவுக்கு வெற்றிக்குப் பாடுபட்டதை எண்ணிப் பூரிப்படைகிறேன். அவருக்குப் பக்கத்திலே நின்று பாடுபட்ட கிருஷ்ணசாமி, வ. சங்கரநாராயணன் போன்ற மற்றும் பல தோழர்களையும் நான் பாராட்டுகிறேன.

இந்தப் பாராட்டுதல் சொல்லோடு முடிகிறது; ஆனால் சொல்லோடு மட்டுமல்ல; எனக்குக் கொஞ்சம் நஷ்டத்தையும் தந்த இன்னொன்றையும் சொல்கிறேன். நம்முடைய நண்பர் கருணாநிதியவர்கள் இந்தக் குழுவிற்குத் தலைவராக இருந்த காரணத்தினால், "பல இடங்களிலே வெற்றி பெறுவோம்" என்று என்னிடத்திலே சொன்னார். "முடியாது" என்றேன் நான். அவசரப்பட்டுத்தான் சொல்லிவிட்டேன்; இப்போது வருத்தப்படுகிறேன். "அப்படி வெற்றி பெற்றால் என்ன தருவீர்கள்?" என்று கேட்டார் கருணாநிதி. நான் எதுவுமே தர வேண்டிய அவசியமிருக்காதே என்று கருதி, "ஒரு பவுனிலே தங்க மோதிரம் போடுகிறேன்" என்று சொன்னேன். நான் என்னுடைய மனைவிக்குக்கூட ஒரு மோதிரம் இதுவரையில் செய்து போட்டது கிடையாது; ஆனால் இன்று இந்த 45 பொல்லாத தோழர்கள் பெற்ற வெற்றியினால், இந்தக் கட்டிளங் காளைக்கு மோதிரம் அளிக்க வேண்டியவனாக இருக்கிறேன்!

ஆனால் இந்தத் தேர்தலிலே மிகச் சுறுசுறுப்பாகப் பணியாற்றி, அதிகமான கூட்டங்களிலே கலந்துகொண்டு, நாவலர் நெடுஞ்செழியன் அவர்களோடு உடனிருந்து, திறம்பட செயலாற்றிய கருணாநிதி பாராட்டுதலுக்கும், என்னுடைய பெருமதிப்புக்கும் இலக்காகக்கூடியவர். ஆகையினால் நீங்களெல்லாம்



தஞ்சை மாவட்டம் தந்த சென்னை மாவட்டச் செயலாளர்...
...தலைநகர் வெற்றிக்கு செங்குட்டுவனின் பணியும் காரணம்!

மகிழத்தக்க அளவிலேயும்— நான் கொஞ்சம் வருத்தப்படத்தக்க வகையிலேயும் இம் மோதிரத்தை அவருக்கு அணிவிக்கிறேன்.

இந்த மோதிரம் அவரது உழைப்பிற்குப் பலன் என்று அர்த்தமல்ல; மோதிரத்திலும் மேலான என்னுடைய உள்ளன்பைப் பெற்றிருக்கிறார் என்பதே பொருள்!

நண்பர்களே! நான் மோதிரம் கொடுத்ததைத்தான் பார்த்தீர்கள். அது தங்கமோ அல்லவோ என்ற சந்தேகம் உங்களில் சில பேருக்கு இருக்கலாம். மோதிரத்தைப் பெற்றுக் கொண்டவருக்கே அந்த சந்தேகம் இருப்பதால்தான், திருப்பித் திருப்பிப் பார்க்கிறார். உங்களுக்கும் அவருக்கும் உறுதியாகச் சொல்லுகிறேன், அது தங்க மோதிரம்தான்! நல்ல பட்டப் பகலில், கொதிக்கின்ற வெயிலில், நகைக் கடைக்குப் போயே பழக்கமில்லாத நான் இன்றைய தினம் முதல் தடவையாக அங்கு சென்றேன். அங்கே யிருக்கின்ற நகைகளையெல்லாம் பார்த்துப் பிரமிப்படைந்து, இவ்வளவு நகைகளையா மக்கள் வாங்குகிறார்கள் என்று எனக்கு நானே கேட்டுக் கொண்டு, நல்லவேளையாக என்னுடைய மனைவி இப்படிப் பட்ட நகைகளைப் பார்த்ததில்லையே என்று திருப்தியும் அடைந்துகொண்டு, இந்த மோதிரத்தை வாங்கிக் கொண்டு வந்தேன்! அது அசல் தங்கம்; ஆகவே நல்ல பொன் குணம் படைத்த கருணாநிதிக்குச் செல்லுகிறது! அவருக்கு மேலும் மேலும் கீர்த்தியையும், அந்தக் கீர்த்தியின் மூலம் நம்முடைய கழகத்திற்கு நல்ல பெருமையையும் நிச்சயம் தேடித் தரும்!

சந்திக்கும் எதிர்ப்பை சமாளிக்கத் தெரியும்!

தஞ்சை மாவட்டத்திலே திருவாரூரிலே நான் பேசுகின்ற நேரத்தில், நான் சொன்ன சில கருத்துக்கள் சென்னையில் இருக்கிற 'மெயில்' பத்திரிகைக்குத் தவறான முறையில் செய்தியாகத் தரப்பட்டு, அவர்கள் ஒரு தலையங்கத்தைத் தீட்டியிருக்கின்றார்கள். அந்தத் தலையங்கத்திலே, "இப்போது மிகப் பெரிய அளவில் வெற்றி பெற்றிருக்கின்ற கட்சி திராவிட முன்னேற்றக் கழகம்தான்! ஆகவே அதுதான் நகரத்தினுடைய நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் அண்ணாத்துரை நாங்கள் பதவிக்குச் செல்லமாட்டோம் என்று பேசியிருப்பதைப் பார்த்து நாங்கள் உண்மையாகக் கவலைப்படுகிறோம். பதவியை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். நிர்வாகத்தை அவர்கள் திறம்பட நடத்த வேண்டும்" என்று எழுதியிருக்கின்றது. அந்த நல்லெண்ணத்துக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். 'மெயில்' ஏட்டின் நம்பிக்கை வீண்போகாத வகையில், எங்களிடம் நிர்வாகப் பொறுப்பைத் தருகின்ற நேரத்தில் நிச்சயம் திறம்பட நடத்திக் காட்டும் ஆற்றல் உள்ளவர்கள் தான் இன்று கிடைத்திருக்கிறார்கள். பொறுப்புகளிலிருந்து ஓட மாட்டோம் நாங்கள்! ஆனால், எங்களைப் பொறுப்பிலே இருக்க விடக்கூடாது என்று காங்கிரஸ் ஆட்சி கருதுமேயானால், அந்தக் காங்கிரஸ் ஆட்சிக்குப் பாடமாக முதல் தலையங்கத்தை எழுதியிருக்க வேண்டும், 'மெயில்' ஏடு!

நான் பொறுப்புகளிலிருந்து தப்பிக்கொண்டு ஓடியதில்லை; ஏன் — ஆபத்துக்களிலிருந்தே நான் தப்பித்துக்கொண்டு ஓடியதில்லை! எத்தகைய எதிர்ப்புகளையும் சமாளித்து நிற்கக் கூடிய ஒரு இயக்கத்திலே ஈடுபாடு கொண்டவன். பொறுப்புகளை ஒப்படைப்பார்களேயானால், அதைத் திறம்பட நடத்திக் காட்டும் ஆற்றலுடையோர் ஆயிரக் கணக்கானோரை பெற்றிருப்பவன், நான்!

ஜனநாயகம் என்பது தர்மம், நியாயத்திற்கும் கட்டுப்பட்டதாக இருக்குமானால், மிகப் பெருவாரியான வாக்குகளைப் பெற்றிருக்கிற எங்களிடத்தில் காங்கிரஸ்கட்சி தானாகவே பொறுப்பை ஒப்படைக்க வேண்டும்.

[தொடர்ச்சி பக்கம்—8]

கரும்பு விளைய வளமிருந்தும் இரும்பு மனம் இளகவில்லையே!

[சி. ஜம்பு]

திராவிடம் எல்லாத் தொழில் துறைகளிலேயும் எல்லா வகையாலும் தாழ்ந்து, நலிவுற்றுக் கிடக்கின்றது என்பதை திராவிடர்கள் உணர்ந்து வருகின்றார்கள். திராவிடத்தில் பல்வேறு தொழில் வளர்ச்சிக்கான திட்டங்கள் சிறப்பாக நிறைவேறுவதற்கு நிறைய வாய்ப்புகளும், வசதிகளும் மல்கிக் கிடக்கின்றன. வாய்ப்புகள் பல இருந்தாலும், மாநில அரசாங்கங்களின் திடமற்ற போக்காலும், இந்திய சர்க்காரின் புறக்கணிப்புக்கொள்கையாலும் திராவிடம் தொழில் வளர்ச்சியில் தனக்குரிய பங்கை மேலும் மேலும் இழந்துதாழ்ந்து வருகின்றது.

சர்க்கரைத் தொழிலை உதாரணத்துக்கு, பொதுவாக எடுத்துக்கொண்டு ஆராய்ந்தால் திராவிடம் எந்த சிறப்பான அளவிற்கு அத்தொழிலில் வளர்வதற்குரிய வாய்ப்புகள் அனைத்தும் நிறையப் பெற்றிருந்தும், அவைகளை சரிவரப் பயன்படுத்த முடியாத நிலைமையில் பின் தங்கியிருக்கின்றது என்பதை நன்கறிந்து தெளியலாம்.

கரும்புச் சாகுபடிக்கு ஏற்ற சீதோஷ்ண நிலை வட நாட்டிலே இல்லை. ஆனால், திராவிடத்தில் கரும்பு செழுமையாய் வளர்வதற்கான சீதோஷ்ண நிலையும், ஏனைய வசதிகளும் நிறைய உண்டு. பொதுவாக கடுமையான உஷ்ணப்பிரதேசங்களிலே தான் கரும்பு வளமாய் உற்பத்தியாகும். மேற்கிந்தியத் தீவுகள், ஜாவா போன்ற உஷ்ணப் பிரதேசங்களிலேதான் கரும்பு நன்றாய் வளர்கின்றது. ஆனால், இந்தியாவைப் பொறுத்த அளவில் வட நாட்டிலே கரும்பு உற்பத்தி அதிகம். தென்னகத்திலே மிகக் குறைவு. வட நாட்டில் 90 சதவிகிதம் கரும்பு உற்பத்தி; தென்னகத்தில் 10 சதவிகிதம். இந்த நிலை கரும்பு விளைச்சலில் இருக்கிற காரணத்தினால் வட நாட்டிலே சர்க்கரை ஆலைகள் அதிகம், தென்னாட்டிலே குறைவு.

திராவிடம் கரும்பு உற்பத்தியிலே முன்னணிக்கு வர வேண்டும் என்ற பிரச்சினை நெடுங்காலமாகவே இருந்து வருகின்றது. ஆங்கிலேய ஏகாதிபத்தியம் இந்தியாவை ஆண்டு கொண்டிருந்த காலத்திலேயே — 1931ம் ஆண்டிலும், 1937ம் ஆண்டிலும் அமைக்கப்பட்ட டாரிப் போர்டு கரும்புச் சாகுபடி நன்கு நடைபெறுவதற்கேற்ற சீதோஷ்ண நிலைமை தென்னாட்டிலேதான் பொருந்தியிருக்கின்றது என்பதைக் கண்டறிந்தது. எனவே, வட நாட்டிலே அதிகக் கவனம் செலுத்தாமல், தென்னாட்டில் கரும்பு உற்பத்தி விரைவாக அதிகரிப்பதற்கான வழி வகைகளில் அரசாங்கம் குறிப்பாக நாட்டம் செலுத்த வேண்டும்— என்ற நல்ல முடிவையும் டாரிப் போர்டு தெரிவித்தது.

வெள்ளையரின் ஏகாதிபத்தியம் வெளியேறி 12 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. என்றாலும், 'இன்றைய நாள்வரையிலும் கரும்புச் சாகுபடியிலேயும், சர்க்கரை ஆலைகளிலேயும் நம்மை ஆளும்வட நாடுசிறந்துவளர்ந்து [..]ங்குகின்றதே தவிர, திராவிடம் சிறப்பைக் காண இயலவில்லை. எத்துணை பெரிய ஆராய்ச்சியாளர்கள் கூடி, நிலைமைகளை நன்கறிந்து, கரும்புச் சாகுபடிக்கு ஏற்ற நல்லிடம் திராவிடம்; எனவே அங்கு கரும்பு உற்பத்தி அதிகரிப்பதற்கான காரியங்களில் உடன் ஈடுபடுங்கள் என ஆணையிட்டாலும் அவைகளைப் பொருட்படுத்தாமல் வடநாட்டு ஏகாதிபத்தியம் வீணே காலங்கடத்தி வருகின்றது.

இந்த சாதகமான நிலைமைகளை விளக்கிக் கூறி தமிழகம் சர்க்கரைத் தொழிலில் விரைவில் முன்னேறுவதற்கான நல்ல வழிகள் காண சென்னை சர்க்காரும் முயலவில்லை. ஆனால் அதற்கு மாறாக இப்படிப்பட்ட பிரச்சினைகளை நாட்டு மக்களிடத்தே நாள்தோறும் கூறிவரும் தி. மு. கழகத்தை சென்னை மாநில அமைச்சர்கள் தாக்கிப் பேசுவதையே தங்களுடைய தனிப் பெரும் தொழிலாய்க் கொண்டிருக்கின்றனர்.

இன்றைய நிலையிலேகூட, திராவிடத்தின் பகுதிகளிலேதான் ஏக்கர்விதத்தில் கரும்பு உற்பத்தி கூடுதலாக விளைகின்றது. வட நாட்டிலே ஏக்கருக்கு கரும்பு உற்பத்தி தென்னாட்டிலே விளைவதைவிட குறைவாகும். 1948—49-ம் ஆண்டில் சர்க்காரால் தரப்பட்ட கீழ்வரும் விவரத்தால் நன்கு அறியலாம்.

மாநிலம்	கரும்பு உற்பத்தி ஆயிரம் ஏக்கரில்	ஏக்கருக்கு சராசரி விளைவு டன் கணக்கில்
உத்திரப் பிரதேசம்	2101	11·7
பீகார்	380	9·8
கிழக்குப் பஞ்சாப்	298	11·3
சென்னை	209	27·7
இந்தியா முழுவதிலும்	3645	13·7

எனவே, அதிகமான அளவில் உத்திரப் பிரதேசத்திலும், பீகாரிலும் கரும்பு சாகுபடியாகின்றது. ஆனால், ஏக்கருக்கு கரும்பு விளைச்சல் மிகக் குறைவாகும். தமிழ் நாட்டில் ஏக்கருக்கு கரும்பு உற்பத்தி குறிப்பிடத்தக்க அளவில் கூடுதலாக இருந்தும் சாகுபடிப் பரப்பு மிகக் குறைவாகும். இந்தியா முழுவதையும் எடுத்துக் கொண்டு பார்த்தால் உத்திரப் பிரதேசத்திலேயும், பீகாரிலேயும் மட்டில் மூன்றில் இரண்டு பங்கு கரும்பு உற்பத்தியாகின்றது. தென்னாட்டில் கரும்பு உற்பத்தி வளரக் கவனம் செலுத்த வேண்டும் என 1931—லேயே டாரிப் போர்டு சிபார்சு செய்திருப்பதை முன்னரே எடுத்துக்காட்டியுள்ளோம். என்றாலும் இது வரை தென்னாட்டில் கரும்பு விளைகின்ற நிலப் பரப்பை விரிவாக்க எவ்வித முயற்சியையும் காணோம்.

கரும்பு எங்கு அதிகம் சாகுபடியாகின்றதோ, அந்தப் பகுதியிலேதான் சர்க்கரை ஆலைகளும் நிறைய உருவாக வாய்ப்புண்டு. எனவே, இன்றைக்கு சர்க்கரைத் தொழிற்சா[..] வடநாட்டிலேதான் அதிகம்; தென்னாட்டிலே குறைவாகும்! 1955-56-ம் ஆண்டில் சர்க்கரை தொழிற்சாலைகளின் மாநில ரீதியான விவரம் கீழேத் தரப்படுகின்றது.

மாநிலம்	ஆலை எண்ணிக்கை
உத்திரப்பிரதேசம்	68
பீகார்	28
பம்பாய்	15
ஆந்திரா	8
சென்னை	4
மத்திய பாரத்	4
பெப்சு	3
ஐதராபாத்	2
மைசூர்	2
ராஜஸ்தான்	2
மேற்கு வங்காளம்	1
ஒரிஸ்ஸா	1
பஞ்சாப்	1
திருவாங்கூர்-கொச்சி	1
சௌராஷ்டிரா	1
சி. மாநிலங்கள்	2
இந்தியா அனைத்திலும்	143

மேற்கண்ட விவரத்திலிருந்து உத்திரப் பிரதேசத்திலேயும், பீகாரிலேயும் மட்டில் இந்தியாவில் உற்பத்தியாகும் சர்க்கரையில் 70 சதவீதம் உற்பத்தியாகின்றது என்பது தெரிகின்றது. அத்துடன், திராவிடத்தில் 17 சர்க்கரைத் தொழிற்சாலைகள் மட்டுமே இருபபதும் அறியக் கிடக்கின்றது.

1955—ம் ஆண்டில் இந்தியாவில் சர்க்கரைத்தொழிற்சாலைகளிலிருந்து மட்டில் உற்பத்தியான சர்க்கரையின் மதிப்பு ரூ. 120 கோடியாகும். நல்ல பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த இவ்வளவு பெரிய தொழில் தென்னகத்தில் சீருஞ் சிறப்புமாய் வளர்ந்தோங்க இயற்கை பல்வகையாலும் வசதியளித்திருந்தாலும் சென்னை சர்க்காரின் அடிமை புத்தியில், உரிமை உணர்வற்ற ஏமாளித்தனத்தால் எவ்வித முன்னேற்றத்தையும் காணமுடியவில்லை.

ஆண்டொன்றுக்கு 18 லட்சம் டன் இந்தியாவில் சர்க்கரை உற்பத்தியாகக்கூடிய அளவில் சர்க்கரைத் தொழிற்சாலைகளை விரிவுபடுத்தவும், புதிய தொழிற்சாலைகளை நிறுவவும் இந்திய சர்க்கார் 1954—ல் முடிவெடுத்தது. எனவே, இதையொட்டி 48 புத்தம் புதிய தொழிற்சாலைகளில் சர்க்கரை உற்பத்தியை அதிகரிக்கவும் லைசென்சுகள் வழங்கப்பட்டன. உத்திரப் பிரதேசம், பீகார் ஆகிய இரு மாநிலங்களிலேயே சர்க்கரைத் தொழிற்சாலைகள் மிக அதிகமாய்க் குவிந்து கிடக்கின்றன என்பதை உணர்ந்து, வேறு மாநிலங்களுக்கு முக்கியத்துவம் தந்து அங்கும் சர்க்கரைத் தொழில் வளரும் வகையில் புதிய லைசென்சுகள் வழங்கப்பட்டன என்று இந்திய அரசாங்கம் அறிவித்தது. ஆனால், விவரத்தை அறிந்தால் விபரீதத்தை விளக்கமாய் உணரலாம். புதிதாக வழங்கப்பட்ட லைசென்சுகளின் விவரம் பின்வருமாறு:

மாநிலம்	புதிய ஆலைகள்	பழைய ஆலைகள் வளர்ச்சி
பம்பாய்	17	7
சென்னை	7	—
ஆந்திரா	4	4
மைசூர்	4	1
பஞ்சாப்	3	1
ஐதராபாத்	2	1
அஸ்ஸாம்	2	—
உத்திரப் பிரதேசம்	2	22
மேற்கு வங்காளம்	2	1
பீகார்	—	3
ஒரிஸ்ஸா	—	1
பெப்சு	—	1
ஆகக் கூடுதல்	43	42

இந்திய சர்க்கார் தென்னாட்டில் சர்க்கரை உற்பத்தியை பெருக்குகின்றோம் — உத்திரப் பிரதேசத்தில் பற்பல சர்க்கரைத் தொழிற்சாலைகளை மென்மேலும் குவிக்க மாட்டோம் என உறுதி கூறிக்கொண்டே எவ்வாறு உத்திரப் பிரதேசத்தையும். ஏனைய வடக்கு மாநிலங்களையும் வளர்க்கிறார்கள் என்பதை மேற்கண்ட புள்ளிவிபரம் நன்கு தெளிவுபடுத்துகின்றது.

திராவிடப் பகுதிகளிலே புதிய சர்க்கரை ஆலைகள் 17 அமையவும், பழைய சர்க்கரை ஆலைகளில் விரிவுபடுத்த 6 ஆலைகளும் அனுமதிக்கப்பட்டுள்ளன. இவைகளின் விளைவாக 22 ஆயிரம் டன்கள் சர்க்கரை உற்பத்தி கூடுதலாகும். வடநாட்டிலே புதிய சர்க்கரைத் தொழிற்சாலைகள் 26 உருவாகவும், மேலும் விரிவாக நடத்தப்பட 36 தொழிற்சாலைகளும் அனுமதிக்கப்பட்டு 514 ஆயிரம் டன்கள் சர்க்கார் உற்பத்தி அதிகமாகும்.

திராவிடத்தில் சர்க்கரைத் தொழிற்சாலைகள் நிறுவ இயற்கையாகவே நல்வாய்ப்புகள் மலிந்திருந்தாலும் திராவிடம் புறக்கணிக்கப்படுகின்றது.

இத்தகைய நிலைமை மாறி தென்னகம் உரிய பங்கும், வாய்ப்புக்களுக்கேற்ற வகையில் வளரவுமான நிலைமையைத் தொழில் துறையில் பெற்றாக வேண்டும். ஆளும் காங்கிரஸ் அமைச்சர்களோ நம் தென்னாடு புறக்கணிக்கப்படவில்லை என ஆதாரங்களை வழங்காமல், ஆர்ப்பரிக்கின்றனர். அவர்களுக்கு நல்ல புத்தி எவ்வளவு எடுத்துச் சொன்னாலும் வராது. இந்திய தேசீயத்திரை கிழித்தெறியப்பட்டு, உதயசூரியனின் பொன்னிறமான கதிரொளி பரவினால்— திராவிடம் மலர்ந்தால்தான் — தென்னகம் பல்வேறு வகையிலும் முன்னேற வாய்ப்புண்டு. இதைத்தான் சர்க்கரைத் தொழிலில் தென்னாட்டின் நிலைமை நன்கு விளக்குகின்றது.

வாரி விழுங்குது வடக்குப் புயல்! வரிப்புலியே, எழுந்து வெளியே வா!

புயல் ஏழட்டும் தென்னகத்து வயல்களிலே! அந்த நாடு பஞ்சத்தால் நாடி தளரட்டும்! பசியால் வாடி வதங்கட்டும்! அதைப் பற்றி எள்ளளவும் கவலையில்லை! கப்பம் சரியாக வசூலிக்கப்பட்டால் போதும்! நம்முடைய ஆட்சி ஆல் போல் வேரோடி தழைத்து வளர்ந்தால் போதும்!

அந்தக் கறுப்பர்களின் கடலுக்கு அடியிலே காட்சிதரும் முத்துக்குவியல்களையும், பூமிக்கு அடியிலே புதைந்து கிடக்கும் தங்கரேக்குகளையும் இன்னும் பல வளம் தரும் கனி வளங்களையும் அவர்களின் கண்களிலிருந்து மறைத்துவிடு! காரணங்கள் பல சொல், அதற்கு! காரணத்துள் பெரிய காரணமான 'ஏக பாரத கீதம்' பாடிவிடு! எல்லாவித சந்தேக நோயும் தீர்ந்துவிடும்!

அந்த பாரத கீதத்தைப் பாடுவதற்கு முன்னால் பாரதத்தின் கலை, கலாச்சாரம், கால அளவைகள், மொழி அத்துணையும் ஏற்றுக்கொள்! அவற்றை உன் மனபீடத்திலே பதித்துக்கொள்! 'உரிமை உரிமை' என்ற உலுத்தர்களின் குரலை உன் காதுகள் கேட்காதிருக்கட்டும்! எங்கள் ஆட்சி தங்குதடையின்றி வளரட்டும்.

—என்றுதான் கங்கைச் சமவெளிக்காரர்கள் தங்களுக்கே உரிய ஏகாதிபத்யத் தத்துவத்தை அவர்களின் தென்னகத்துச் சந்தையிலே சொல்லிவருகிறார்கள்.

தோன்றி மறைந்துவிடும் சர்வாதிகாரம் என்கிற மின்னல் வாழ்வை மறந்துவிட்டு தலைமுறை தலைமுறையாக வந்த திராவிடத்தின் தனிப்பட்ட வாழ்வை, கலையை அழிக்கப் புறப்பட்டிருக்கிறார்கள்.

அவர்களின் அழிவு யாத்திரையில் முன்னோடும் பிள்ளையாக விளங்குவது இந்தி. அந்த மந்தி மொழியின் மண்டை தாங்க முடியாத அளவுக்கு இடியையும் அடியையும் நாம் அடிக்கடி தந்தும்கூட, டில்லிக்காரர்களின் ஆதிக்க வைத்தியத்தால் அது இறக்காமல் பிழைத்து வருகிறது!

தென்னாட்டின் தனித் தன்மையை விழுங்கும் இந்த இழிவுப் பணியிலே இந்தி மட்டுமன்று ஈடுபட்டிருப்பது!

நாள் காட்டும் காலண்டர்கூட அந்த வடவர் ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கத்தை நிலை நிறுத்தும் பணியில் ஈடுபட்டிருக்கிறது.

இப்போது வழங்கி வருகிற ஆங்கிலக் காலண்டரை அரபிக் கடலில் எறிந்துவிட்டு அந்த வடநாட்டில் ஆண்ட சாக மன்னர்களின் காலத்தில் எழுந்த காலண்டரை நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். இப்போது அரசாங்க அலுவலகங்களிலும், வாணிபர்களிடையேயும், கடைகளிலும் வழங்கி வருகின்ற ஆங்கில மாதங்களுக்குப் பதில் 'சாக காலண்டரின் மாதங்கள்' நடை முறை வழக்கத்திற்கு வரப்போகிறதாம்.

சாக ஆண்டுகளும், மாதங்களும் பிறந்ததுகூட புராணச் சகதிக் காட்டிலிருந்துதானும்!

நாரதன் எனும் கலக மூட்டித் திரிகின்ற கட்டைப் பிரமச்சாரித் தேவனுக்குத் திடீரென்று ஒரு நாள் காம உணர்வு தோன்றியதாம்!

உடனே தான் அடிக்கடி வழிபடும் நாராயணனிடம் சென்று "ஏ, பிரபு! நீ அறுபதாயிரம் கோபி பெண்களின் கோவை இதழ்களைச் சுவைத்து அனுபவிக்கிறாய்; இன்பம் உன்னுடைய ஏகபோகத்திற்குரிய சொத்து எனக் கருதி வாழ்கிறாய். ஆனால் உன்னையே நிமிடத்திற் கொரு தரம் ஜபித்து வாழ்கிற எனக்கு ஒரு அழகுப்பெண்ணைத் தரமாட்டாயோ? ஏ, கருணைக் கடலே! அந்தக் காமன் கலையை எனக்குக் காட்ட மாட்டாயா?"—என்று வேண்டி நின்றானும்.

நாரதனுக்குக் காமன் கலையைக் கற்பிக்க நினைத்த நாராயணன், நாரதனைப் பெண்ணாக உருவெடுக்கச் செய்து அவனுடன் இன்பம் துய்த்தானும்! அதன் விளைவாய்ப் பிறந்தவை தாம் பிரபவ, விபவ எனத் தொடங்கும் அறுபது ஆண்டுகளும்! ஆபாசத்தின் அடிப்படையிலிருந்து கிளம்பிய இந்த 'சாக யுகம்' சைத்ரா எனும் மாதத்திலிருந்து துவங்குகின்றதாம். அப்போது ஆங்கில காலண்டரின் படி மார்ச் 22 ஆகிறதாம்! அதைப் போல மற்ற 'சாக யுகத்தின்' விசித்திரமான மாதங்களையும் அதற்கு நேரான ஆங்கில மாதத்தையும் கீழே காண்க:—

சைத்ரா 1 — மார்ச் 22
வைசாகா 1 — ஏப்ரல் 21
ஷெய்ஷ்டா 1 — மே 22
அசாதா 1 — ஜூன் 22
ஸரவன 1 — ஜூலை 23
பத்ரா 1 — ஆகஸ்ட் 23
அஸ்வினு 1 — செப்டம்பர் 23
கார்திகா 1 — அக்டோபர் 23
அக்ராஹாயன் 1—நவம்பர் 22
பாவ்சா 1 — டிசம்சர் 22
மகா 1 — ஜனவரி 21
பல்குனு 1 — பிப்ரவரி 20

1957—ம் ஆண்டிலிருந்தே அமுலுக்கு வந்த இந்த வடவரின் ஏகாதிபத்தியக் காலண்டரைத் திணிக்கும் பணி இப்போது வேகமாக்கப்பட்டிருக்கிறதாம்.

இந்தக் காலண்டரின் எல்லை குறுகியது; இப்போது இருக்கும் ஆங்கில காலண்டரின் எல்லை உலகம் முழுவதுமானது!

இந்தக் காலண்டர் நம் தென்னவருக்கு விளங்காத ஒன்று! இல்லாத தேசியத்தை நிலை நிறுத்த எழுந்த 'சப்பைக் கட்டு'க் காலண்டர்!

இந்தக் காலண்டர் நம் அழகு தமிழ் விளையாடும் நாவில் நுழைய முடியாத அளவு மொழியால் பண்பற்றது!

எல்லாவற்றிற்கும் மேலாக இந்நாட்டு மக்கள் ஏதோ ஒரு ஆதிபத்தியத்தின் ஆபாசத்திற்குக் கட்டுப்பட்டவர்கள், களபலியாகத் தகுந்தவர்கள், இவர்களுக்கென்று தனி மொழி, பண்பு, கால அளவைகள் இல்லை என்பதையும் எடுத்தோதும் அடிமைச் சாசனம்தான் இந்த சாக யுகத்துக் காலண்டர்!

இந்த அடிமைச் சாசனம் ஏன் நம்மீது சுமத்தப்பட்டது?

குட்டக் குட்டக் குனிகின்ற தன்மை இருப்பதால்தான்!

அடிக்க அடிக்க நாணிக் கோணிக் கண்ணீர் மல்கும் பேடித்தனம் உள்ளத்தின் ஆழத்தில் புதைந்திருப்பதால்தான்!

இந்தியை நுழைத்தார்கள்! குனிகின்ற தன்மையை விலக்கி அன்று எதிர்த்தோம். எதிர்ப்பைக் கண்டு பயந்து நடுங்கி, இன்று கொல்லைப்புற வழியில் சந்தடியின்றி நுழைகிறார்கள்!

உலகம் முழுதும் பரந்து கிடக்கும் ஆங்கிலக் காலண்டரான கிரிகோரியின் காலண்டரைத் தூக்கி எறிந்து விட்டு 'சாக காலண்டரை' நம்மீது திணித்திருக்கிறார்கள்.

இந்த நுழைக்கும் வேலையும், திணிக்கும் வேலையும் டில்லி ஏகாதிபத்தியம் முக்கியமான தினசரிக் கடமைகளில் ஒன்றாக எண்ணி முழுமூச்சுடன், ஈடுபடுகிறது! அந்த ஏகாதிபத்தியத்தின் முழுமூச்சு, கடைசி மூச்சாக மாற, அதனுடைய அர்த்தமற்ற செயல்கள் அஸ்தமனமடைய, அந்த வடக்கு யானை புகுந்த திராவிடக் கருப்பஞ்சோலை சீர்பெற, வாயடியும் கையடியும் கொண்டு டில்லிக்குக் காவடி தூக்குவோர் ஒழிந்து நம்நாடு இன்பச் சாவடியாக மாற, விடுதலைக்கனலை உள்ளத்திலே கொழுந்துவிட்டெரியும்படி செய்யும் வழியைத் தவிர, வேறு வழியே இல்லை!

'சாக காலண்டரை' நுழைப்பதன் மூலம் தனித்தியங்கும் திராவிடத்தின் பண்பிற்கு மறைமுகமாக சாவு எனும் பரிசளிக்க நினைக்கிறார்கள், அவர்கள்!

ஆனால் அந்த 'சாக காலண்டரே' அவர்களின் ஏகாதிபத்யம் இந்தத் தென்னகத்து மண்ணில் திராவிடத்து வரிப்புலியின் அடிபட்டு வீழ்ந்து சாவதற்கான வழியை நேர்முகமான வகுக்கப் போவது திண்ணம்!

—அடியார்

தலைமைக் கழக அறிக்கை : 6—59

உதகையில் சட்டமன்றம் கூட்டுவதற்குக் கண்டனம்

20-4-59 முதல் 26-4-59 வரை கண்டன வாரம்

★

பொதுச்செயலாளர் அறிக்கை

பொது மக்களின் விருப்பத்திற்கு மாறாகவும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோரிக்கைக்குச் செவி சாய்க்காமலும், திராவிட முன்னேற்றக் கழகச் சட்ட மன்றக் கட்சியின் வேண்டுகோளைப் புறக்கணித்தும் சென்னை அரசியலார், சட்டமன்றக் கூட்டத்தை 20—4—59 முதல் பத்து நாட்கள் உதகமண்டலத்தில் கூட்டுவது என்று முடிவு செய்துவிட்டார்கள்.

இந்தச் செயல், காங்கிரசு ஆட்சியினரின் வெற்று ஆடம்பரத்திற்கும், அரசாங்கத்தின் வீண் செலவிற்கும், பொது மக்கள்—அலுவலாளர்—செய்தித்தாளினர் ஆகியோரின் பெருந் தொல்லைகளுக்கும் வழி செய்வதாக இருக்கிறதேயல்லாமல், எந்த உருவான பலனையும் பயப்பதாக இல்லை.

இந்தச் செயல் கண்டனத்திற்குரியது என்பதைக் காட்டும் அறிகுறியாக தி, மு. க. சட்டமன்ற உறுப்பினர்கள் உதகைக்குச் செல்ல மறுத்துக் கண்டனத்திற்கான காரணங்களைப் பொது மக்களுக்கு விளக்கிக் காட்டவும், பொது மக்களின் கண்டனத்தை ஆட்சியாளருக்குத் தெரியப்படுத்தவும் தத்தம் தொகுதிகளில் சுற்றும்பயணம் மேற்கொள்ள இருக்கின்றனர்.

ஆங்காங்குள்ள கிளைக் கழகத் தோழர்கள் 1959 ஏப்ரல் திங்கள் 20-ஆம் நாளிலிருந்து 26-ஆம் நாள் வரையிலுள்ள ஒரு வார காலத்தைக் கண்டன வாரமாகக் கொண்டு, பொது மக்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கண்டன ஊர்வலம் நடத்துதல்—பொதுக் கூட்டம் கூட்டுதல்—துண்டு அறிக்கைகள் வெளியிடுதல்—கண்டனத் தீர்மானம் நிறைவேற்றுதல் போன்ற ஏற்ற செயல்களைச் செய்து, கண்டன வாரத்தை வெற்றிகரமாக முடிக்கக் கேட்டுக் கொள்கிறோம்.

கூட்டங்களில் நிறைவேற்றப்படும் கண்டனத் தீர்மானத்தைச் சென்னை அரசியலாருக்கு அனுப்பிவைக்க வேண்டுகிறோம். கழகச் சட்ட மன்ற உறுப்பினரல்லாத பிற சட்டமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்துள்ள தொகுதிகளிலுள்ள கழகத் தோழர்கள், கூட்டங்களில் நிறைவேற்றப்படும் கண்டனத் தீர்மானத்தை அந்தந்தத் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினருக்கும் அனுப்பிவைக்கக் கேட்டுக் கொள்கிறோம்.

'அறிவகம்', சென்னை-13
13—4—1959.

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. க.

அண்ணா பேச்சு...

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

அப்படி ஒப்படைப்பார்களேயானால், இங்கே இருக்கும் 45 பேர்களில் மேயரை — உதவி மேயரை—கமிட்டி உறுப்பினர்களை நான் காட்ட முடியும்!

நாளையே இவர்களை அழைத்து —கழகத் தோழர்களைக் கூப்பிட்டு—சென்னையிலே தெருக்களில் இருக்கிற அசுத்தங்களையும், குப்பைகளையும் நீங்களே வாரி சுத்தப்படுத்த வேண்டும் என்று ஆணையிட்டால், இன்று வெற்றிக் கொடி ஏந்தி யிருப்பவர்கள், நாளையே கூட்டுக்கோல் பிடிக்கவும் துணிவு பெற்றவர்கள்!

திராவிட முன்னேற்றக் கழகம் தயாரித்திருக்கிற கரங்கள் செங்கோலை மட்டுமே ஏந்தக்கூடிய கரங்கள் அல்ல; ஏர் பிடிக்கும் சிறுகோலை ஏந்திப் பழக்கப்பட்ட கரங்கள்! கள்ளமார்க்கெட்டிலே கையெழுத்திடாத கரங்கள்! பதவிப் பிரியர்களுக்குக் கைலாகு கொடுக்காத கரங்கள்! திருட்டுக் கணக்கு எழுதாத கரங்கள்! மண்டியிடும் பண்போடு மாற்றானை அழைக்காத கரங்கள்! உழைத்த கரங்கள்; உழைத்துப் பிழைக்கக் கூடிய கரங்கள்!

அவர்கள் சில பேருடைய கைகளில் நாளை காலை தராசு இருக்கக்கூடும்; சிலருடைய கைகளில் மண்வெட்டியோ— எழுதுகோலோகூட இருக்கக் கூடும்! ஆனால் ஒருவருடைய கையும் ஏமாந்தவருடைய மடியில் செல்லாத கரங்கள்!

வழி அமைப்பீர்; விலகி நிற்பீர்!

ஆகவே, நான் திட்டமாக- தெளிவாக—தட்டாமல்—தயங்காமல் துணிவோடு சொல்லுவேன். பொறுப்புகளை ஏற்றுக் கொள்வதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்!

ஆகவே ஆற்றல் மிக்கவர்கள்— வருகிறார்கள்—சற்றே விலகி நில்லுங்கள்!

உழைக்கக் கற்றுக் கொண்டவர்கள் வருகிறார்கள் — ஊராள்வதற்குக் கொஞ்சம் வழி கொடுங்கள்!

பெங்ளினிலிருந்து தலைவன் வருகிற நேரத்தில், மாஸ்கோவிலிருந்தும் லண்டனிலிருந்தும் அமெரிக்காவிலிருந்தும் பிரமுகர்கள் வருகிற நேரத்தில், மேயராக இருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர், கைலாகு கொடுக்கிற நேரத்தில் என்ன சொல்லுவார்? எனக்கு இருக்கின்ற மோட்டார் கார் ரோல்ஸ் ராய்ஸ் என்று சொல்ல முடியாது! என்னுடைய வீடு மூன்றடுக்கு மாடி என்றோ — அடுத்த வருடம் நான் அமெரிக்காவுக்கு வருவேன் என்றோ சொல்ல முடியாது! "நான் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவன்" என்று தான் சொல்ல முடியும்.

இந்தச் சேதி மாஸ்கோவிற்குச் செல்லும் என்ற மருட்சி — அமெரிக்காவுக்குத் தெரியும் என்ற அச்சம் — பிரான்சிலே பேசப்படும் என்ற பீதி—காங்கிரசாரை ஆட்கொண்டுவிட்டது!

அதனாலேதான் நமக்குக் குறுக்கே நின்று சூதுவாதுகளில் ஈடுபடுகிறார்கள். அவற்றை எதிர்த்து—சமாளித்து—நம் கழகத் தோழர்கள்தான் மேயர் பதவியில் அமரவேண்டும் என்று கருதினால் 'ஆம்' என்று குரலோடு கரங்களை உயர்த்துங்கள்!

['ஆம்' என்ற குரல் கடல் அலைகளோடு போட்டியிட்டது.]

இந்தக் குரலைக் கேட்டு நான் மகிழ்கிறேன். 'மக்கள் குரல்தான் மகேசன் குரல்' என்று அரசியல் சட்டம் சொல்லுகிறது. நீங்கள் தீர்ப்பளித்து விட்டீர்கள்! இந்தத் தீர்ப்புக்கு அடிபணிய வேண்டிய பொறுப்பு காங்கிரஸ் தலைவர்களைச் சேர்ந்தது!

நகர் சிறக்க-நல்ல திட்டங்களுண்டு!

இந்த நகரத்திலே கிடைக்கக் கூடிய வரி கொஞ்ச நஞ்சமல்ல; வரி கொடுக்காமல் ஏமாற்றுகிற செல்வவான்கள் விரல்விட்டு எண்ணக் கூடியவர்களுமல்ல; அதிகமான வரி கொடுக்கின்ற ஏழை மக்கள் ஏராளமாக இருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் பதவி ஏற்றால் இதற்கு சில திட்டங்கள் வைத்திருக்கின்றது.

வரியே கட்டமுடியாது தவிக்கின்ற ஏழை மக்களுக்குப் போட்டிருக்கின்ற வரியைக் கூடுமான வரை குறைத்து, தாங்கக்கூடிய



சரிந்த தமிழர் சமுதாயம் வாழ வழிவகுத்த
சர். தியாகராயர்!

சீமான்களுக்குப் போட்டிருக்கிற வரியை ஒழுங்காக—தயை தாட்சண்யமின்றி வசூலிக்கும்—என்பது ஒரு திட்டமாகும்!

ஏழை எளியவர்கள் வாழ்கின்ற பகுதியில் மிகுந்து கிடக்கும் அசுத்தங்களை—சுகாதாரக் குறைவான கேடுபாடுகளை நீக்கி— சர்க்காருடைய ஒத்துழைப்புடன், அங்கிருக்கும் இருளைக் கொஞ்சம் நீக்குவது; கிடைக்காத ஒளியில் கொஞ்சம் பெறச் செய்வது;கவலையில் கொஞ்சம் குறைப்பது—இதுவும் ஒரு திட்டம்!

அதிகச் செலவு செய்து வைக்கப்பட்டிருக்கின்ற மருத்துவ விடுதிகளில் நுழைகின்ற 100 ஏழை நோயாளிகளில், 90 பேர் திரும்பி வீட்டுக்குப் போவதில்லை; நேராகச் சுடலைக்குத்தான் செல்கிறார்கள். அவைகளையும் நன்கு மாற்றி அமைத்து, நோயோடு நுழைபவர்கள் திடகாத்திரத்தோடு திரும்ப வசதிகள் செய்து தருவது—ஒரு திட்டம்!

நகருக்குத் தேவையான குடி தண்ணீர் வசதிக்காக பல்லாண்டு காலத்திற்கு முன்னாலேயே தீட்டப்பட்டு இன்னமும் ஏட்டளவில் இருக்கிற கிருஷ்ணா —பெண்ணாறு திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வர மாநில சர்க்காரிடம் வாதாடுவது; போராடுவது—என்பது இன்னுமொரு திட்டம்!

அமைச்சர் கக்கன் சொன்னாராம், "குடித்தண்ணீர் திட்டத்தை நிறைவேற்றுவதாக திராவிட முன்னேற்றக் கழகம் ஏழை மக்களுக்கு ஆசை வார்த்தைகள் சொல்லலாம்; ஆனால் அவர்கள் எழுதி அனுப்பினால் கையெழுத்துப்போட வேண்டியவன் நானல்லவோ" என்று! என்ன அரசியல் தெளிவு! எவ்வளவு அரசியல் பெருந்தன்மை! எத்தனை தூரம் ஜனநாயகத்தைப் பயின்றிருக்கிறார்!

திராவிட முன்னேற்றக் கழகத்தார் நகரசபையைக் கைப்பற்றி விட்டார்கள்; ஆகவே இனி குழாய்களுக்குத் தண்ணீர்விட மாட்டோம் என்று சொல்லுங்கள், தைரியமிருந்தால்! நீங்கள் சொல்லி முடித்த இருபத்தினாலாவது மணி நேரத்தில் அமைச்சர்கள் ஒவ்வொருவராக சென்னை உயர்நீதி மன்றத்துக்கு இழுத்துக் கொண்டு வரப்படுவார்கள், வழக்குத் தொடரப்பட்டு!

உங்களைக் கார்ப்பரேஷனில் அவர்கள் புறக்கணித்தால், நாங்களும் சட்டசபையிலே அமைச்சர்களைப் புறக்கணிப்போம்! பதிலுக்கு பதில்—அதுவும் ஈடு செய்ய முடியாத அளவில் இருக்கும்!

நகர சபையில் உங்களுக்குத் தொல்லைகள் கொடுக்கிறார் என்றால் மறுநாள் காலை அதே தொல்லையை அவர்களுக்கு — 15 பேர்கள் அல்ல; 14 பேர் மட்டும் நிச்சயம் கொடுப்பார்கள்! நான் ஒருவன் மட்டும் செய்ய மாட்டேன்; அதிலே போதுமான பயிற்சியுமில்லை; நாட்டமில்லை எனக்கு! ஆகவே என்னை சட்டசபைக்கே வர விட மாட்டார்கள்! 14 பேர்கள் மட்டுமே போவார்கள். போனால் சொல்லத்தான் வேண்டுமா? இந்தத் தம்பிமார்களை இரண்டாண்டு காலமாக இழுத்து இழுத்து வைப்பதிலே உள்ள சிரமத்தை நான் மட்டுமேதான் உணர முடியும்!

திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்பதற்கு காங்கிரசார் குறுக்கே நிற்கக் கூடாது; சுயேச்சையாக வெற்றி பெற்றவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்; நீங்களும் எங்களோடு ஒத்துழைத்து உறுதுணையாக நிற்க வேண்டும். பிரஜா சோஷலிஸ்டுகளையும், சோஷலிஸ்டுகளையும் கேட்டுக் கொள்வேன்; நீங்களும் மக்கள் குரலுக்கு மதிப்பளித்து எங்களுக்குத் துணைபுரிய வேண்டும். கம்யூனிஸ்டுகளையும் கேட்டுக்கொள்ள வேண்டும் என்று எனக்கு ஆசைதான் — ஆனால் தீர்மானிக்கின்ற பொறுப்பு அவர்களிடம் இல்லாத காரணத்தால் —மேலிடத்தில் கேட்டு என்ன செய்வதென்று அறிந்து—பிடித்தமானது என்று தோன்றினால் செய்யுங்கள்; இல்லை என்றால் ஒதுங்கி நில்லுங்கள்; எதிர்க்கத்தான் போகிறோம் என்றால், சமாளிக்கிறோம்!

துரோகத்தின் கதை!

பல நகராட்சி மன்றங்களில் கம்யூனிஸ்ட் இயக்கத்தார் கழகத்தோடு ஒத்துழைத்திருப்பார்களேயானால், காங்கிரஸ் கட்சி பல ஊர்களிலே தோற்றிருக்கக் கூடும்.

காஞ்சி நகராட்சி மன்றத்திலே இரு கம்யூனிஸ்டுகள் உறுப்பினர்களாக வந்திருக்கிறார்கள். அவர்களைப் பலமுறை நான் சந்தித்தேன். அந்த இருவரும் ஒட்டளித்தால் காங்கிரஸ் தலைமை அமையாது என்று சொன்னேன். ஆனால், கடைசியில் அவர்கள் காங்கிரஸ் வெற்றி பெறுவதற்குத்தான் மறைமுகமாகத் துணை நின்றார்கள்! தமிழிலே இதற்கு அநேக சொற்கள் உண்டு. 'துரோகி' என்பார்கள். 'கூடிக் கெடுத்தவன்', 'அடுத்துக் கெடுத்தவன்' என்றெல்லாம் சொல்வார்கள். அவைகளை எல்லாம் சொல்ல நேரமில்லை. காரணம், நாம் செல்லவேண்டிய தூரம் நிரம்ப இருக்கிறது. வழியிலே எத்தனையோ முட்கள் இருக்கும். அவை வலது காலிலே குத்தினால், இடது கையால் எடுத்து வீசிவிட்டு நடக்க வேண்டும், நாம்!

இரவல் சரக்கை என் இயக்கம் தேடாது!

மற்ற கட்சியினர் யாரும் முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்து விட வேண்டும் என்று நான் அழைக்கவில்லை. என்னுடைய இயக்கத்திற்கு நான் எப்போதும் இரவல் சரக்கைத் தேடுபவன் அல்ல. நான் மிகப் பொறுமைசாலி அரசியலில். காத்திருப்பேன் கனிகின்ற வரையில். கனிந்த கனி மற்றவர்க்குக் கிடைத்துவிடாமல் பார்த்துக் கொண்டிருப்பேன். அது கனிந்ததும் என் மடியில்தான் விழும்!

நம்முடைய தோழர்கள் எல்லாம் நகர மன்றத்திலே நுழைகிற நேரத்தில், உச்சியிலிருந்து பாதம் வரையில் தொங்கக்கூடிய நல்லதோர் மலர் மாலையைத் தயாரித்து, நகரசபைக் கட்டிடத்திற்கு எதிரிலே கவனிப்பாரற்று நிற்கின்ற — தமிழர்களைக் கை தூக்கிவிட்ட சர் தியாகராயர் சிலைக்கு அணிவித்து, அவரது பொன்னடிகளைத் தொழவேண்டும். "மகானே! நீங்கள்தான் தமிழர் சமுதாயத்திற்கு முதன் முதல் அறிவூட்டினீர்கள்; வாழும் மார்க்கத்தைக் கற்றுக் கொடுத்தீர்கள்; உங்களது வழி வந்த நாங்கள், நீங்கள் பட்ட தொல்லைகளைவிட அதிகமாக அவதிப்பட்டோம். நீங்களாவது செல்வச் சீமான்; நாங்கள் பஞ்சை பராரிகள்! ஆனால் சீமான்கள் உங்களை மதிக்க மறந்தார்கள்; ஏழைகளாகிய நாங்கள் உங்களை மறக்கவில்லை!" என்று வீர வணக்கம் செலுத்திவிட்டு உள்ளே நுழைந்து கடமையாற்ற வேண்டுகிறேன்!

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, முரசொலி அச்சகம், 4—128, மவுண்ட் ரோடு, சென்னை-6, தமிழ்நாடு